# போரதீவுப் பற்றுப் பிரதேச சபை
# மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மிளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 21 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 22 ஆந் திகதி கணக்காய்விற்காக சமரப்பிக்கப்ட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய போரதீவுப் பற்றுப் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய போரதீவுப் பற்றுப் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணங்காமைகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் இல. 137 மற்றும் 138 | பொறுப்பு வாய்ந்த அலுவலரின் உறுதிப்படுத்தலின்றி பல்வேறு தேவைகளுக்காக ரூபா 3,574 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | கிழக்கு மாகாண நிதி விதி இல. 73 | ரூபா 2,525,601 தொகையான உள்நாட்டுப் போரில் அழிவடைந்த சொத்துக்களை பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | இல. 273 | 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 14,996 தொகையான மாற்றப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | விசேட வர்த்தமானி அறிவித்தல் - வடக்கு கிழக்கு மாகாண விதி 3(1) | மாதாந்த சபை அமர்வுகளில் பங்குபற்றாத உறுப்பினர்களுக்கு ரூபா 10,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவு | கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 6,774 தொகையான 5% நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிகள் அதிகாரச் சட்டம் | ஊதியங்களிலிருந்து ரூபா 325 தொகையான முத்திரை வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1769 ஆம் இலக்க 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதிய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 63,801 தொகையான வரைதற்கட்டணங்கள் பொது சுகாதார பரிசோதகர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (எ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 3.9.1 | கொள்வனவு வழிகாட்டிக்கு முரணாக ரூபா 2,500,000 பெறுமதியான சிவில் வேலைகள் கையளிக்கப்பட்டிருந்தன. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 4,283,242 ஆக இருந்ததுடன் அதற்கு நெரொப்ப முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 3,779,358 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | - | - | 31 | - | - | - |
| (ii) | குத்தகை வாடகைகள் | 486 | 508 | - | 203 | 185 | 42 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 190 | 190 | - | 1,374 | 1,374 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 1,141 | 1,637 | - | 2,981 | 2,485 | 515 |

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 9,275 | 8,262 | 1,013 | 8,158 | 7,698 | 460 |
| ஏனையவை | 2,124 | 5,337 | (3,213) | 2,251 | 8,250 | (5,999) |
| உப மொத்தம் | 11,399 | 13,599 | (2.200) | 10,409 | 15,948 | (5,539) |
| மூலதனச் செலவினம் | 2,250 | 17,796 | (15,546) | 2,300 | 15,577 | (13,277) |
| முழு மொத்தம் | 13,649 | 31,395 | (17,746) | 12,709 | 31,525 | (18,816) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் தரங்கள் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 15 | 12 |
| ஆரம்ப தரங்கள் | 19 | 19 |

| | | |
|---|---|---|
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 10 |
| | --------------- | ------------- |
| | 35 | 42 |
| | ===== | ====== |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 1.366,739 ஆகும்.

### 2.5.2 அறவிடவேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடவேண்டியிருந்த பதவியினர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 486,297 ஆகும்.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வுகள் / கணிப்பீட்டுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத புத்தக மீதிகளில் கணிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 51,229,937 ஆக இருந்தது.

## 2.6 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

ரூபா 162,518 தொகையான காசு மோசடி தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு

(ஆ) வருமான நிர்வாகம்